**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்க அகில இந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி–I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாணவ/மாணவிகளுக்கு முதன்மைத்தேர்வு எழுத நிதியுதவி அளித்தல் – ரூ.38,50,000/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந–3.2) துறை**

**அரசாணை (நிலை) எண்: 01** | **நாள்: 28.02.2020**
**ஸ்ரீ விகாரி வருடம், மாசி 16,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2051**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.42, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–3.2)த் துறை, நாள்: 09.12.2016
2. அரசாணை (நிலை) எண்.50, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–3.2)த் துறை, நாள்: 26.12.2017
3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர்/இயக்குநரின் கடித ந.க.எண்.4904/மாதிந–3.1/2019, நாள்: 10.09.2019 மற்றும் 23.10.2019.

********

**ஆணை:-**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி–I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் முதற்கட்டமாக 2016–2017–ஆம் நிதியாண்டில் ஊக்கத் தொகையாக ரூ.50,000/– வீதம் 20 பயனாளிகளுக்கு ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்காணும் திட்டத்தை 2017–2018ம் ஆண்டிற்கு தொடர்ந்து நடத்த திட்டத் தொடராணையும், 24 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க ஏதுவாக ரூ.12,00,000/–க்கு நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர்/ இயக்குநர், 2019–2020–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சியடைந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியல் அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து கோரப்பட்டது எனவும், அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்பட்ட தொகுதி–I முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சியடைந்த மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட 239 (237+2) நபர்களின் சான்றிதழ்களை ஆய்வு செய்த போது, 86 நபர்கள் மட்டும் ஊக்கத்தொகை பெறத் தகுதிவாய்ந்த நபர்களாக கருதப்படுகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் 2019–2020–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடாக ரூ.4,50,000/– மட்டும் பெறப்பட்டுள்ளது எனவும், ஊக்கத்தொகை பெறத் தகுதியுள்ள மேற்காணும் 86 நபர்களில், வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள ரூ.4,50,000/–ஐ 9 மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது

போக மீதமுள்ள 77 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/– வீதம் ரூ.38,50,000/– (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) உரிய கணக்குத் தலைப்பில், திருத்திய மதிப்பீட்டில் கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3ல் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர்/இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அகில இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி–I முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டத்தினை 2019–2020–ஆம் நிதியாண்டில் செயல்படுத்தும் விதமாக ஊக்கத்தொகை பெற தகுதிவாய்ந்த 86 நபர்களில் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ள ரூ.4,50,000/–ஐ 9 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/– வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது போக மீதமுள்ள 77 மாணவர்களுக்கு தலா ரூ.50,000/– வீதம் ரூ.38,50,000/– (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

> "2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் 101 – மாற்றுத் திறனாளிகள் நலன்– I – மாநிலச் செலவினங்கள் – BB – மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் – 312 – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் – 09 – ஏனையவை".
> (IFHRMS த.தொ.கு.2235 – 02 – 101 – BB – 31209)
> (பழைய த.தொ.கு.2235 – 02 – 101 – BB –1290)

6. மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.38,50,000/– 2019–2020–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2019–2020–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2019–2020–ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளில் இத்தொகையை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ச.ந) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர்/இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதல் பெற்ற அ.சா.கு.எண்.6041/ச.ந/2020, நாள்: 26.02.2020 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.3100 (மூவாயிரத்து நூறு)–ன் படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

சா.விஜயராஜ் குமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்/இயக்குநர், சென்னை–05.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்
(மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.

<u>நகல்:–</u>
நிதி (சந/வ.செ. பொ.I)த் துறை, சென்னை–09.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–09.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

02/03/2020
பிரிவு அலுவலர்
தி.க
2/3/2020
2/4